



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மும்மொழிக் கொள்கையை திணித்து, மீண்டும் ஒரு மொழிப்போருக்கு நிர்ப்பந்திக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, மாணவ இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு, கரூர் மாவட்ட கழக மாவட்ட மாணவர் அணி சார்பில் கரூர் தபால் நிலையம் அருகே, மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## இந்தித் திணிப்பைக் கடுமையாகக் கண்டிக்கிறோம்!

# கழகத் தலைவர் - முதல்வரின் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

### கழக நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப். 27 - தி.மு.க. நெசவாளர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 25-2-2025 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில், துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், காஞ்சிபுரம் தி. அன்பழகன், ஆகியோர் வரவேற்புரையாற்றிட, அணிச் செயலாளர் எஸ்.எல்.டி. சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, பரணி கே.மணி, நெல்லை சொ. பெருமாள், பொள்ளாச்சி கே.எம். நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் - துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணி மாறன், திருச்சி கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, தலைமைக் கழக செய்தி தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

இரங்கல் தீர்மானம்

கழக மூத்த முன்னோடியும், கழக நெசவாளர் அணியின் மாநில துணைச் செயலாளருமான தேனி, ஆண்டிப்பட்டி ராமசாமி அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

விழுப்புரம் தெற்கு மாவட்ட நெசவாளர் அணியின் மாவட்டத் தலைவர் வி.அண்ணா மலை அவர்களின் மறைவிற்கும்,

விழுப்புரம் தெற்கு மாவட்ட நெசவாளர் அணியின் துணை அமைப்பாளர் கண்டாச்சிபுரம் எம். இளஞ்செழியன் அவர்களின் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், இழப்பால் வருந்தும் அவர்களின் குடும்பத்தாருக்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 1:**

திராவிட இயக்கத்தின் இன்றைய தலைமுறையின் ஈடுஇணையற்ற தலைவரும், திராவிடத் தின் திருவிளக்கு, தமிழகத்தின் ஒளிவிளக்கு, தமிழகத்தில் சமத்துவம், சகோதரத்துவம் பேணிக் காக்கின்ற, எல்லாம் எல்லோருக்கும் என்ற கொள்கையையும், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் ஊட்டி வளர்த்த சுயமரியாதை சிந்தனையையும், தன்மான உணர்வையும் தன்னகத்தே ஏற்று, கடைபிடித்து அனைத்து மக்களின் நல்வாழ்வையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு திராவிட மாடல் நல்லாட்சி நடத்தும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 1 முதல் நலத்திட்டங்கள் வழங்கியும், அரசின் சாதனைகளை விளக்கியும் சிறப்பாக கொண்டாடுவது என இக்கூட்டம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 2:**

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக கடைபிடித்து வரும் இரு மொழிக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தி தாய் மொழியாம் தமிழ் மொழியின் பாரம்பரியம், கலாச்சாரத்தினை ஒழித்தொழிக்கவும், தமிழ் மொழியின் மேன்மையை சீர்குலைக்கவும் ஒன்றிய அரசு புதிய தேசிய கல்விக் கொள்கையான மும்மொழி திட்டம் மூலம் இந்தியை திணிக்க முற்படுவதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

எங்கெல்லாம் இந்தி திணிக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அம்மாநிலத்தின் தாய் மொழி சிதைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்தும், பல்வேறு மொழி பேசும் மாநிலங்களின் கூட்டமைப்பு தான் இந்திய ஒன்றியம் என்பதை மறந்து, மாநில மொழிகள் மீது எள்ளளவும் பற்றில்லாமல், கூட்டாட்சி தத்துவத்தை சிதைக்க முற்படுகின்ற முயற்சியில் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் மும்மொழித் திட்டத்தை ஏற்றால்தான் தமிழக அரசிற்கு வழங்க வேண்டிய நிதியை தர முடியும் என்ற ஆணவ, ஏதேச்சிகார பேச்சுக்கும், சர்வாதிகார மனப்போக்கிற்கும் இக்கூட்டம் தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 3:**

மாநிலங்களில் CBSE பள்ளிகள் தொடங்க அந்தந்த மாநிலங்களின் ஒப்புதல் பெற்ற பின்னரே இதுவரை தொடங்கப்பட்டது. ஆனால் மாநில அரசுகளின் உரிமையை பறிக்கின்ற வகையில் CBSE பள்ளிகள் தொடங்க மாநில அரசுகளின் ஒப்புதல் பெறாமல் ஒன்றிய அரசே தன்னிச்சையாக அனுமதி வழங்கி, CBSE பள்ளியை தொடங்க முடிவெடுத்துள்ளது. இதன் மூலம் தேசியக் கல்விக் கொள்கையை அமுல்படுத்த முயற்சிக்கும் இச்செயலை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன் மாநில அரசுகளின் தடையில்லா சான்று பெற்ற பின்னர்தான் CBSE பள்ளிகள் துவங்க வேண்டும் என்றும் மாநில அரசுகளின் அதிகாரத்தில் தலையிட வேண்டாம் என்றும் ஒன்றிய அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 4:**

நலிந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றிருந்த காசுக் கடன் நபார்டு வங்கி உதவியுடன் செலுத்தி, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து செயல்பட உதவியது போல நலிவடைந்த விசைத்தறி மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள காசுக் கடனை நபார்டு வங்கி மூலம் செலுத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து செயல்படவும், நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும் உதவிட தக்க ஆவன செய்து உதவுமாறு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் வேண்டிக் கொள்கிறது.

தீர்மானம் 5:

சமீபத்தில் நடந்து முடிந்த ஈரோடு இடைத் தேர்தலில் மாண்புமிகு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சிக்கு அங்கீகாரம் வழங்கும் வகையிலும், 2026ல் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிக்கு மேல் வெற்றி என்ற இலக்கை எட்டும் வகையில் அச்சாரமாக கழக வேட்பாளரை வெற்றிப் பெற செய்து என்றும் கழக ஆட்சிக்கு உறுதுணை நிற்போம் என்று வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு இக்கூட்டம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் தென் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கழக த.ரமேஷ், துணை அமைப்பாளர் கே. வெங்கட்ராமன் ஆகியோர் நன்றியுரையாற்றினார்கள்.


# தி.மு.க.வின் மொழி உணர்வு!

சுதந்திரம் பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தொடங்கப்பட்டது தான் திராவிட முன்னேற்ற கழகம். தொடங்கப்பட்ட நாள் முதல் இன மொழிக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது கழகம்.

இந்தி திணிப்பை அந்தக் காலம் முதலே தனது எதிர்ப்பை தொடர்ந்து பதிவு செய்து நாட்டையே ஸ்தம்பிக்கச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம். 1965ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டம் நாட்டையே ஸ்தம்பிக்க செய்தது.

1965 மார்ச் மாதம் மாநிலங்களவையில் அண்ணா இந்தி எதிர்ப்பு போராட்டம் பற்றி விளக்கினார். தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தை தூண்டியது திமுக என்று கூறப்படுவதை நான் மறுக்கிறேன். தமிழ் நாட்டில் மாணவர்கள் உணர்வுபூர்வமாக கிளர்ந்து நடத்திய போராட்டம் அது. ஜனவரி 26ஆம் நாள் முதல் இந்தி ஆட்சி மொழியாக்கப்படும் என்பதால் ஜனவரி 25ஆம் தேதி கருப்பு தினம் என்று அனுசரித்தோம். அன்றைய மாநில முதல்வர் இந்தப் போராட்டம் பற்றி எந்தவித அறிக்கையும் தராமல் ஜனநாயக விரோத முறையில் நடந்து கொண்டார். தமிழக மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோதும் தமிழக மக்கள் வேட்டையாடப்பட்ட போதும் கேரளாவுக்கு வந்த பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி ஏன் சென்னை மாகாணத்துக்கு வரவில்லை என்று கோபத்துடன் பேசினார் அண்ணா.

நாடாளுமன்றத்தில் ஆட்சி மொழி சிக்கல் பற்றி பேசியது குறித்து அண்ணா அவர்கள் 21.03.1965 காஞ்சி இதழில் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். நாம் சொல்லி வருவதெல்லாம் இந்தி இந்தியாவில் ஒரு பகுதியினரின் தாய்மொழி. அதனை இந்தியாவில் ஆட்சி மொழி என்று ஆக்குவது கூடாது.பெரும் தீது அது. இந்தி பேசாத மக்களை அநீதிக்கு ஆட்படுத்தும் இரண்டாம் தர குடிமக்களாக்கும். ஆகவே அதனை ஒப்பமாட்டோம் எதிர்க்கிறோம் என்பதாகும். அண்ணா மாநிலங்களவையில் பேசியதானதும் இந்தி தீவிர கட்சியான ஜனசங்கத்தைச் சேர்ந்த வாஜ்பாய் பேசினார். அவர் அண்ணாவையும் அண்ணா சொன்ன கருத்துக்களையும் பலமாக தாக்குவார் என்ற நப்பாசை பலருக்கு இருந்தது. ஆனால் அவரே அண்ணாதுரை சொல்லுகிற 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற திட்டத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று தான் பேசினார்.



**எஸ்.ரகுபதி**
சட்ட அமைச்சர்

இன்றைய பாரதிய ஜனதாவின் அன்றைய ஜனசங்க கட்சி தலைவராக இருந்த வாஜ்பாய் அப்போதே திமுகவின் ஆட்சி மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த வரலாறு எல்லாம் மோடியின் பாரதிய ஜனதா கட்சிக்கு தெரிய வாய்ப்பில்லை. .

அண்ணா ஊட்டிய அதே மொழி உணர்வை கலைஞர் கட்டிக் காத்தார் நமது தளபதி அதே வேகத்துடன் தமிழுக்காகவும் இந்தி திணிப்புக்காகவும் போராடி வருகிறார்.

அதனால்தான் 1967 தேர்தல் அறிக்கையிலேயே தமிழ் போன்று உள்ள 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும், அதுவரை தற்போது உள்ளபடி ஆங்கிலம் நீடிக்க வேண்டும் எனவும் அனைத்திந்திய அரசு தேர்வுகளிலும் இந்திக்கு மட்டும் இடம் அளிப்பது போன்று தமிழுக்கும் மற்ற மொழிகளுக்கும் அந்த வாய்ப்பு தரப்பட வேண்டும் எனவும் கழகம் குறிப்பிட்டிருந்தது. கழகம் இந்தி பேசாத மற்ற மாநில மக்களுக்காகவும் தனது குரலை தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது .

மொழி பற்றிய பிரச்சினை 1946இல் அரசியல் நிர்ணய சபையிலே எழுப்பப்பட்டது. உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த துலேகர் என்ற இந்தி வெறியர். அந்தக் கூட்டத்தில் பேசும் போது இந்தி பேசாதவர்கள் இந்தியர்கள் அல்ல. இந்தி பேசாதவர்கள் அரசியல் நிர்ணய சபையை விட்டு வெளியேற வேண்டும் என்று பேசினார்.

இதற்கு தென் இந்தியாவைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தார்கள். அதில் முக்கியமானவர்கள் டி.டி.கிருஷ்ணமாச்சாரி, கோபால்சாமி ஐயங்கார், பேராசிரியர் என். ஜி .ரங்கா, டி.ஏ ராமலிங்க செட்டியார், மைசூர் பகுதியை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ராவ் ஆகியோர்.

இதில் டி.டி கிருஷ்ணமாச்சாரி துலேக்கருக்குச் சொன்ன பதில் சரியான பதிலடி. நாங்கள் வலுவான இந்தியாவை உருவாக்க விரும்புகிறோம். ஆனால் இந்தி நம்மை அடிமைப்படுத்தி விடும் என்று அச்சம் எனக்கு ஏற்படுகிறது. இந்தி ஏகாதிபத்தியம் வந்து விடுமோ என்ற பயம் எனக்கு ஏற்படுகிறது. உங்களுக்கு முழு இந்தியா வேண்டுமா அல்லது இந்தி இந்தியா வேண்டுமா இதை உத்தரப்பிரதேச உறுப்பினர்தான் முடிவு செய்ய வேண்டும் என்றார்.

இதேதான் இன்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி சொல்கிறார். இந்தி இந்தியா எங்களுக்கு வேண்டாம் என்பதுதான் கழகத்தின் முடிவு.

ராஜாஜியின் இந்தி எதிர்ப்பு கோஷம் ரொம்பவும் பிரபலம். Hindi never. ENGLISH EVER என்பதுதான் அந்த கோஷம். உலக மொழியான ஆங்கிலத்தை அவர் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. உலகத்தில் எல்லோராலும் பேசப்படும் மொழி ஆங்கிலம் என்றார் ராஜாஜி. ஆங்கிலத்தை வைத்து இந்தியை உள்ளே நுழைய விடாமல் தடுக்க முடியும் என்று வற்புறுத்தினார் ராஜாஜி. இந்தி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் அந்நிய மொழி என்றால் இந்தி பேசாதவர்களுக்கும் இந்தி அந்நிய மொழி தான் என்றார் ராஜாஜி.

தமிழர்களின் மொழி உணர்வுக்கு இப்படி நிறைய ஆதாரங்களை நாம் சொல்லிக் கொண்டே போகலாம். மொழி உணர்வு என்ற நெருப்பை இன்று வரை அணைக்காமல் கட்டி காப்பது திராவிட முன்னேற்ற கழகம் தான்.

மற்ற மொழியாளர்களின் உணர்வுகளை தி.மு.க. என்றும் மதிக்கிறது. 1972ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் தேதி நாடாளுமன்றத்தில் சில மொழிகளை எட்டாவது அட்டவணையில் சேர்ப்பது தொடர்பான மசோதா தாக்கல் செய்த போது அதை ஆதரித்து தான் திமுக உறுப்பினர்கள் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் தந்து மற்ற மொழிகளை பின்னுக்குதள்ளும் போக்கு மாற வேண்டும் என்பதுதான் . இதைத்தான் அன்றும் இன்றும் திராவிட முன்னேற்ற கழகம் சுட்டிக்காட்டுகிறது.

ஆட்சி மொழி சட்ட மசோதா விவாதத்தில் (டிசம்பர் 11, 1967 ஆம் ஆண்டு) பேராசிரியர் அன்பழகன் நாடாளுமன்றத்தில் பேசியதை இப்போது இருக்கும் பாரதிய ஜனதா நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற நூலகத்தில் சென்று எடுத்து படித்துக் கொள்வது நல்லது. அவர் அப்போதே அடுத்த தலைமுறை நாடாளுமன்றத்துக்கு வந்துவிட்டது அந்த நாட்கள் போல் இந்த நாட்கள் இல்லை காலம் மாறுகிறது அதற்கேற்ற படி நீங்கள் மாறிக் கொள்ளுங்கள் என்று என்று அறிவுரை வழங்கி இருக்கிறார் பேராசிரியர்.

இந்தி மட்டும் ஆட்சி மொழி என்பதை நாங்கள் ஏற்கவில்லை இதனால் நாங்கள் ஆங்கிலத்தை ஏற்கிறோம் என்பது பொருள் அல்ல.கட்டாயத்தின் காரணமாக நான் உங்களிடம் இப்போது ஆங்கிலத்தில் பேசுகிறேன். நமது உறுப்பினர் ஆச்சார்யாகிருபளானி இந்தியில் பண்டித்தியம் பெற்றவர் ஆனால், அவர் இன்று பேசும் போது அவரது கருத்தை ஆங்கிலத்தில் தான் சொன்னார். காரணம் அவரது கருத்து இளைய தலைமுறைக்கு போய் சேர வேண்டும் என்ற எண்ணம்தான்.

சக உறுப்பினர் எஸ் .ஏ .டாங்கே இந்தியில் பேசத் தொடங்கினார். ஆனால், ஆங்கிலத்தில் தான் அவர் விவாதித்தார். இந்தி எல்லா இடங்களிலும் பரவ வேண்டும் என்று உங்கள் நோக்கத்தை நான் மதிக்கிறேன். ஆனால் இந்தியை கட்டாயப்படுத்தி எந்த வழியில் திணிக்க முயற்சி செய்தாலும் அதை நான் எதிர்ப்பேன். இந்தி மொழிக்கு தரப்படும் அதே மரியாதை முக்கியத்துவத்தை தமிழுக்கு தாருங்கள். பெங்காலி, மராத்தி இப்படி எல்லா மொழிகளுக்கும் தாருங்கள் என்பது தான் என் கோரிக்கை.

எல்லா மொழியும் சமம் எல்லா மொழியும் ஆட்சி மொழி அந்தஸ்து பெற வேண்டும். அப்போதுதான் பிற மாநிலங்களில் இந்தி மதிக்கப்படும். நாம் எல்லோரும் பாரத மாதாவின் பிள்ளைகள் நாம் எல்லோரும் ஒரே இரத்தம் என்பது உண்மையானால் இது நடக்க வேண்டும். இந்தியா என்பது ஒன்றியம் பல மாநிலங்கள் பல தரப்பட்ட மொழி பேசும் மாநிலங்கள் கொண்ட ஒன்றியம். ஒன்றிய அரசுக்கு அதிக அதிகாரம் என்றாலும் மாநில அரசுக்கு சில சுய உரிமை உண்டு. இந்தி மொழி பல மொழிகளை கடன் வாங்கிஇருக்கிறது. உருது ஆங்கிலம் சமஸ்கிருதம் ஏன் சில தமிழ் வார்த்தைகளை கூட நீங்கள் இந்தியில் உபயோகிக்கிறீர்கள்.

எனவே இந்தி வளர்ச்சி என்பது இயற்கையானது அல்ல. நீங்கள் இந்தியை திணித்து அரசாங்கத்தை இயல்பாக நடத்தலாம் என்று எண்ணாதீர்கள் ரொம்பவும் சிரமப்படுவீர்கள். உத்திரபிரதேசத்தில் இருப்போர் எல்லோரும் இந்தி பேசுவோர் அல்ல.பீகாரிலும் அதேதான். ராஜஸ்தானில் இந்தி மொழி இப்போது பரிசோதனை மொழியாக இருக்கிறது. சிங்கப்பூர், மலேசியா, சிலோன், தென் ஆப்பிரிக்கா, பர்மா மற்றும் இந்தோனேசியா இங்கெல்லாம் தமிழ் பேசுபவர்கள் அதிகம் அங்கெல்லாம் அவர்கள் தமிழுக்கு அங்கீகாரம் தந்தார்களா இல்லையா ? என்று பேசியவர் பேராசிரியர் அன்பழகன்.

பேராசிரியரின் இந்தப் பேச்சு இப்போதைக்கு இருக்கும் இந்தி வெறி பா.ஜ.க. அரசுக்கும் பொருந்தும். இந்தித் திணிப்பு என்பது நாட்டுக்குத் தீங்கானது என்பதை இந்த அரசு புரிந்து கொள்வது நல்லது. அதுவரை தி.மு.க.வின் இந்தி எதிர்ப்பு தொடரும்.



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டக் கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு அனைவரையும் வரவேற்று பேசினார்.



மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்பந்திக்கும் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு FSO TN சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எம்.எம்.செந்தில் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் கண்டன உரை ஆற்றினார். உடன் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., ஜி.சந்திரபோஸ் குறிஞ்சி எஸ்.கணேசன், வி.ராமநாதன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன், வி.ராமநாதன், டி.ஏ.ராஜ், இரா.முருகேசன்,சாந்தி பக்தன்,FSO மாணவர் கூட்டமைப்பு, இந்திய மாணவர் சங்கம் மாவட்ட தலைவர் அகல்யா, வடசென்னை காங்கிரஸ் மாவட்ட தலைவர் எம்.எஸ்.திரவியம், மனிதநேய மக்கள் கட்சி பைசல், மதிமுக சையது அலி, புழல் எம்.நாராயணன், ஜி.துக்காராம் உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.